ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ விண்ணவர் தங்கள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ விண்ணவர் தங்கள் ॥

திருக்கண்ணபுரம் - 4

‡விண்ணவர் தங்கள் பெருமான்⋆ திருமார்வன்⋆
மண்ணவர் எல்லாம் வணங்கும்⋆ மலி புகழ் சேர்⋆
கண்ணபுரத்தெம் பெருமான்⋆ கதிர் முடிமேல்⋆
வண்ண நறுந் துழாய்⋆ வந்தூதாய் கோல் தும்பீ! (1)

வேத முதல்வன்⋆ விளங்கு புரி நூலன்⋆
பாதம் பரவிப்⋆ பலரும் பணிந்தேத்தி⋆
காதன்மை செய்யும்⋆ கண்ணபுரத்தெம் பெருமான்⋆
தாது நறுந் துழாய்⋆ தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (2)

விண்ட மலர் எல்லாம்⋆ ஊதி நீ என் பெறுதி⋆
அண்ட முதல்வன்⋆ அமரர்கள் எல்லாரும்⋆
கண்டு வணங்கும்⋆ கண்ணபுரத்தெம் பெருமான்⋆
வண்டு நறுந் துழாய்⋆ வந்தூதாய் கோல் தும்பீ! (3)

நீர் மலிகின்றதோர்⋆ மீனாய் ஓர் ஆமையுமாய்⋆
சீர் மலிகின்றதோர்⋆ சிங்க உருவாகி⋆
கார் மலி வண்ணன்⋆ கண்ணபுரத்தெம் பெருமான்⋆
தார் மலி தண் துழாய்⋆ தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (4)

ஏரார் மலர் எல்லாம்⋆ ஊதி நீ என் பெறுதி⋆
பாரார் உலகம்⋆ பரவப் பெருங்கடலுள்⋆
கார் ஆமை ஆன⋆ கண்ணபுரத்தெம் பெருமான்⋆
தாரார் நறுந் துழாய்⋆ தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (5)

மார்வில் திருவன்⋆ வலன் ஏந்து சக்கரத்தன்⋆
பாரைப் பிளந்த⋆ பரமன் பரஞ்சோதி⋆
காரில் திகழ்⋆ காயா வண்ணன் கதிர் முடிமேல்⋆
தாரில் நறுந் துழாய்⋆ தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (6)

www.prapatti.com

வாமனன் கற்கி⋆ மதுசூதன் மாதவன்⋆
 தார் மன்னு⋆ தாசரதியாய தடமார்வன்⋆
காமன் தன் தாதை⋆ கண்ணபுரத்தெம் பெருமான்⋆
 தாம நறுந் துழாய்⋆ தாழ்ந்தூதாய் கோல் தும்பீ! (7)

நீல மலர்கள்⋆ நெடு நீர் வயல் மருங்கில்⋆
 சால மலர் எல்லாம்⋆ ஊதாதே⋆ வாளரக்கர்
காலன்⋆ கண்ணபுரத்தெம் பெருமான் கதிர் முடிமேல்⋆
 கோல நறுந் துழாய்⋆ கொண்டூதாய் கோல் தும்பீ! (8)

நந்தன் மதலை⋆ நில மங்கை நல் துணைவன்⋆
 அந்த முதல்வன்⋆ அமரர்கள் தம் பெருமான்⋆
கந்தம் கமழ்⋆ காயா வண்ணன் கதிர் முடிமேல்⋆
 கொந்து நறுந் துழாய்⋆ கொண்டூதாய் கோல் தும்பீ! (9)

‡வண்டமரும் சோலை⋆ வயல் ஆலி நல் நாடன்⋆
 கண்ட சீர் வென்றிக்⋆ கலியன் ஒலி மாலை⋆
கொண்டல் நிற வண்ணன்⋆ கண்ணபுரத்தானை⋆
 தொண்டரோம் பாட⋆ நினைந்தூதாய் கோல் தும்பீ! (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com